# The Sankara Nethralaya Academy

## Seminar on "ICT in Health Care" on 31-05-2012

## News in Tamil News Daily

தினகரன்

Friday, June 01, 2012

# சங்கர நேத்ராலயாவில் மருத்துவ கருத்தரங்கு

சென்னை, ஜூன் 1: சங்கர நேத்ராலயா அகாடமி சார்பில் மருத்துவ சேவையில் தகவல் தொழில் நுட்பம் என்ற கருத்தரங்கு நடந்தது. சங்கர நேத்ராலயா மருத்துவ ஆராய்ச்சி நிறுவன தலைவர் டாக்டர் பத்ரிநாத் தலைமை வகித்தார். கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர் சம்பத்குமார் வரவேற்றார்.



சங்கர நேத்ராலயா கண் மருத்துவமனையில் நேற்று நடந்த கருத்தரங்கில் பேசுகிறார் டாடா கன்சல்டன்சி சுகாதார பிரிவு தலைமை அலுவலர் டாக்டர் சுமந்த் ராமன்.

எலக்ட்ரானிக் மெடிக்கல் ரெக்கார்ட்ஸ் என்ற தலைப்பில் சங்கர நேத்ராலயா கண் மருத்துவத்துறை தலைவர் டாக்டர் சுதிர் பேசியதாவது:

தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக எலக்ட்ரானிக் மெடிக்கல் ரெக்கார்டு என்ற முறை வந்துவிட்டது. இந்த முறையில் நோயாளிகளுக்கு ஸ்மார்ட் கார்டு அடையாள அட்டை வழங்கப்படும். அவரது நோய் குறித்த முழு விவரங்களும் கம்ப்யூட்டர் தலைமையக இணைப்பு வாயிலாக சேமிக்கப்பட்டிருக்கும். வேறு ஒரு மருத்துவமனைக்கு சென்றாலும், அவருக்கு எல்லா சிகிச்சையும் முதலில் இருந்து செய்ய வேண்டிய நிலை வராது என்றார்.

தமிழ் முரசு

31.03.2012



மருத்துவ சேவையில் தகவல் தொழில்நுட்பம் குறித்த கருத்தரங்கு சங்கர நேத்ராலயா கண் மருத்துவமனையில் நடந்தது. இதில் டாடா கன்சல்டன்சி சுகாதார பிரிவு தலைமை அலுவலர் டாக்டர் சுமந்த்ராமன் பேசுகிறார்.